அ.வ.எண். 77/2016 நாள்: 11.03.2026

வா.சா.1 திருமதி.விஜயகுமாரி

I.A.No.77/2026, 78/2026, 79/2026 அனுமதிக்கப்பட்டு சாட்சி திரும்பஅழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.ஆ.7 | 05.03.2003 நாளிட்ட திருவையாறு சார்பதிவாளர் அலுவலக அடமான கடன் பத்திரம் ஆவண எண்.195/2003 சான்றிட்ட நகல். |
| 2 | வா.சா.ஆ.8 | 18.11.2009 நாளிட்ட LIC பீரிமியம் செலுத்திய ரசீது அசல். |
| 3 | வா.சா.ஆ.9 | 26.07.2010 நாளிட்ட LIC பீரிமியம் செலுத்திய ரசீது அசல். |
| 4 | வா.சா.ஆ.10 | 26.11.2010 நாளிட்ட LIC பீரிமியம் செலுத்திய ரசீது அசல். |
| 5 | வா.சா.ஆ.11 | 17.05.2011 நாளிட்ட LIC பீரிமியம் செலுத்திய ரசீது அசல். |
| 6 | வா.சா.ஆ.12 | 15.11.2011 நாளிட்ட LIC பீரிமியம் செலுத்திய ரசீது அசல். |
| 7 | வா.சா.ஆ.13 | 16.05.2012 நாளிட்ட LIC பீரிமியம் செலுத்திய ரசீது அசல். |
| 8 | வா.சா.ஆ.14 | முகவர், கிளைமேலாளர் மன்ற உறுப்பினர் A.காவேரி வழங்கிய குறிப்பு ரசீது அசல். |

4–ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 அடமான கடன் எந்தவருடம் வாங்கினேன் என்றால் 2003–ல் வாங்கினேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வா.சா.ஆ.7 ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.7 ஆவணம் எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் இறந்துபோன தர்மராஜிக்கு நான் மனைவி என்பதை காட்டுவதற்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வா.சா.ஆ.7 அடமான கடன் பத்திரம் ஏற்படுத்தும்போது நான் மனைவி என்று பதிவு செய்த ஆவணம் எதுவும் தாக்கல் செய்து மேற்படி வா.சா.ஆ–7 ஏற்படுத்தப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி வா.சா.ஆ.7–ல் எதற்காக கையொப்பம் செய்தேன் என்றால் நானும் எனது கணவர் தர்மராஜூம் கடன் வாங்கியதற்கு கையெழுத்து போட்டுக் கொடுத்தோம்.

2) இறந்துபோன தர்மராஜூக்கு நான் மனைவியும் அல்ல என்றாலும், வா.சா.ஆ.7 ஆவணம் என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் தர்மராஜூக்கு மனைவியாக இருந்திருந்தால் வழக்கு தாக்கல்

செய்யும்போதே வா.சா.ஆ.7 ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன், நான் மேற்படி இறந்துபோன தர்மராஜூக்கு மனைவியல்ல என்பதால் தான் வழக்கிற்காக தற்போது வா.சா.ஆ.7 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ.13 வரையிலான LIC ரசீதுகள் எனது பெயரில் பணம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கணவர் தர்மராஜ் பெயரில் LIC செலுத்தப்பட்டதற்கான ரசீது உள்ளதா என்றால் அவருக்கு வயதாகிவிட்டதால் எனது பெயரில் நான் செலுத்தி வந்தேன்.

3) வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ.13 ஆவணங்கள் யாவும் நான் இறந்துபோன தர்மராஜின் வாரிசு என்பதை காட்டக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 வழக்கிற்காக என்னால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் இறந்துபோன தர்மராஜூக்கு சட்டப்படியான வாரிசு அல்ல என்பதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

S.d/ Vijayakumari

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.11 17:46:07 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU